இயங்காமல், தண்ணீரில்லாமல் நிலம் காய்கிறது. ஆகவே, அவற்றை மீண்டும் புதுப்பிக்க அரசிடம் திட்டமுள்ளதா ? அது எப்பொழுது செயல்படும் என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் வட்டத்தில் தற்பொழுது 91 நீர் ஊற்றுகள் இயங்கி வருகின்றன. இயங்காதவைகளை உடனடியாகத் திருத்தி அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சுமார் ரூ. 4 இலட்சம் இதற்காக ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, வலசக்காடு, பேரூர், சோழதரம், புடையூர், முடிகொண்ட நல்லூர், மழவ ராய நல்லூர், பாளையங்கோட்டை போன்ற 20 ஊர்களில் ஏறத்தாழ 50 நீரூற்றுகள் இருக்கின்றன. ஆனால் அதிலே இயங்கிக் கொண்டிருப்பது 6 தான். எனவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனம் செலுத்தி தீவிர நடவடிக்கை எடுப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இயங்காத நீர் ஊற்றுகள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு கின்றன.

நிலக்கடலை ஆய்வு நிலையம், பொள்ளாச்சி.

*480 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் 20 வருடங்களாக இயங்கி வரும் நிலக்கடலை ஆய்வு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற முடிவு செய்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவர அறிக்கை* அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இது பொள்ளாச்சி தலுகா பகுதி. அந்தப் பகுதியில் இந்த ஆய்வுக் கூடம் மிக அவசியமாக இருக்கிறது. அதைத் தொடர்ந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

---

* 771ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற் றுள்ளது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கடலை ஆராய்ச்சி நிலையத்தை பொள்ளாச்சி பகுதியிலே வைக்க வேண்டும் என்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறறது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

கவன ஈர்ப்பு அறிவிப்பு எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து.

திரு. துரை முத்துசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர் நான் 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 2-ம் நாள் அன்று 41-வது விதியின் கீழ். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். அறையிலே வந்து பேசுங்கள்.

திரு. துரை முத்துசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர், நான் கொடுத்த வது 41 அறிக்கையிலே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையிலே எழுப்புவது முறையாக இருக்காது. அறையில் வந்து பேசுங்கள்.

நீங்கள் படிக்கும்பொழுதே நான் புரிந்து கொண்டேன். இதையே நீங்கள் கடைபிடித்தால் அவையில் மரபு இருக்காது. இந்த அவையிலே வேண்டாம். அறையிலே வந்து சொல்லுங்கள். 41-வது விதியின் கீழ் வரவில்லை என்று தானே கேட்கப் போகிறீர்கள்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற கருத்தைக் கொஞ்சம் கேளுங்கள். நான் கேட்ட போது மானியக் கோரிக்கையிலே பேசலாம் என்று சொன்னீர்கள். 7-ம் தேதி கால்நடை மானியம் முடிந்து விட்டது ஆனால் எனக்கு அந்தக் கடிதம் 8-ந் தேதி தான் வருகிறது. ஆனால் கல்வி மானியத்தன்று, இப்படிப்பட்ட 41-வது விதி எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது, இது சரிதானா என்று கேட்கிறேன்.